**வரையறுக்கப்பட்ட லங்கா லொஜிஸ்டிக் என்ட் டெக்னோலெஜிஸ் கம்பனி – 2017/2018**

---

வரையறுக்கப்பட்ட லங்கா லொஜிஸ்டிக் என்ட் டெக்னோலெஜிஸ் கம்பனியின் (''கம்பனி'') 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதப்படுகின்ற கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2012 ஆம் ஆண்டு முதல் கம்பனியால் வழங்கப்பட்டிருந்த ரூபா 325.6 மில்லியனான சேவைப் பெறுமதிக்காக வரிப் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொலிஸ், இலங்கை விமானப்படை மற்றும் இலங்கை கடற்படையிடமிருந்து பெற வேண்டியதாக இருந்த ரூபா 97.77 மில்லியனான நிர்வாக சேவைகளின் விநியோக வருமானத்தை உறுதிப்படுத்திக் கொள்வாற்காக நேரடி மீதிகளின் உறுதிப்படுத்தல் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

(இ) 2018 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சிடமிருந்து ரூபா 4,886,265 பெறப்பட வேண்டிய போதிலும், அந்த அமைச்சிலிருந்து அவ்வாறானதொரு மீதி கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக இல்லாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பந்திகளால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2018 மார்ச் 31 ஆந் திகதியல் உள்ளபடியான வியாபார பெற வேண்டிய கணக்கு மீதியானது ரூபா 102 மில்லியனானதுடன், அவற்றுள், ரூபா 84 மில்லியன் இரண்டு வருடங்களை விஞ்சிய பெற வேண்டிய மீதிகள் எவ்வாறு அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த கடன் மீதியை மீளாய்வு செய்யப்பட்டு ஐயக் கடன் மற்றும் அறவிடமுடியாக் கடன்களை வகைப்படுத்தல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 7(c) பந்தி மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் விளக்கமளித்தல் விதி இலக்கம் IC/2013/80. | இந் விதிக்கமைய திறைசேரி பங்கிலாப வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டிருந்ததுடன், கம்பனியால் 2017 ஒக்தோபர் 12 ஆந் திகதி பொதுத்திறைசேரிக்கு ரூபா 1,000,000 தொகையான மொத்த பங்கிலாபம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக ரூபா 100,000 தொகையான பங்கிலாப வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 120(அ) பந்தி. | உழைக்கும் போதே செலுத்தும் வரியானது (PAYE) அதற்கடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் உள்நாடடு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் 2017 ஏப்ரல் மாதத்திற்குரிய உழைக்கும் போதே செலுத்தல்கள் அனுப்பப்பட்டிருந்தது. 2017 மே 22 ஆந் திகதியே ஆகும். |

# 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய, மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவானது ரூபா 34,890,255 ஆன நட்டமாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய வருடத்தின் நிதி விளைவானது ரூபா 10,521,743 ஆன இலாபமொன்றானமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 45,411,998 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 47,638,888 இனால் குறைவடைந்தமை மேற்படி நிதி விளைவிலான வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. மேலும் கம்பனிக்கு பெற வேண்டிய மீதிகயை

செலுத்த வேண்டாமென பாதுகாப்பு அமைச்சு அறிவுரை வழங்கியிருந்தமை மற்றும் பிரதான வாடிக்கையாளர்களை இழந்தமை ஆகியன வருமானம் குறைவடைந்தமை தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈபீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று அதற்கடுத்த நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்த 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வரையிலும், 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் கம்பனியின் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயலாற்றல் மற்றும் மீளாய்வு

கம்பனியின் பிரதான பாதீடானது முப்படைகள் மற்றும் பொலிஸிற்கான முக்கியத்துவம் வாய்ந்த யுத்த உபகரணங்களுக்கான பெறுகை சேவைகளை வழங்குதல் ஆன போதிலும், நிலயிய யுத்த நிலைமை 2009 ஆம் ஆண்டின் போது நிறைவடைந்தமையால், பெறுகை நடவடிக்கைகள் அந்தந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டமையால் கம்பனியின் பிரதான வாடிக்கையாளர்கள் இழப்பதற்கான பாரிய அச்சுறுத்தலொன்று ஏற்பட்டிருந்தது. மேலும், அமைச்சினால் வெளியிடப்பட்ட 2017 யூலை 03 ஆந் திகதிய எம்ஓடீ/பீபி/12/2017 ஆம் இலக்க கடிதத்திற்கமைய, லங்கா லொஜிஸ்டிக் என்ட் டெக்னோலிஜிக் கம்பனியானது பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றாகையால் இந்த கம்பனியின் பெறுகைகளுக்கான ஆயத்தப்படுத்தல் கட்டணங்களாக விசேட கொடுப்பனவொன்றை செலுத்த வேண்டியதில்லை என்பதும், ஏதேனும் வகையில் குறித்த கம்பனியை பராமரிப்பதில் நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்படுமாயின் மாத்திரம் அதற்காக வேறு நிறுவனங்களை போன்றே பொது திறைசேரியிடமிருந்து உரிய நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

| | | 2016/17 | 2017/18 | அதிகரிப்பு / (குறைவு) |
|---|---|---|---|---|
| (அ) | மொத்த இலாப விகிதம் (%) | 96 | 32 | (64) |
| (ஆ) | தேறிய இலாப விகிதம் (%) | 22 | (283) | (305) |
| (இ) | பங்கொன்றிற்கான சட்ட விகிதம் | 1.4 | (4.1) | (5.5) |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் மொத்த இலாப விகிதம், தேறிய இலாப விகிதம் பங்கொன்றிற்கான ஈட்ட விகிதம் என்பன முறையே 64 சதவீதம், 305 சதவீதம் மற்றும் 5.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 4.3 பதவியணி நிர்வாகம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்களின் சம்பள மட்டங்கள், ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறைக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுகளை சமர்ப்பித்தல்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 166(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியால் ஐந்தொகை திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் கம்பனியின் பணிகள் தொடர்பிலான வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இணைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெற்றமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கீட்டு நியமங்களுக்கமைய செயற்படாமை மற்றும் நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் இடம்பெற்றிராமை. |
| (ஆ) குத்தகை | செலுத்த வேண்டிய வரி உரிய முறையில் கணிப்பிடப்படாமை மற்றும் உரிய திகதியில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமை |
| (இ) பதவியணி நிர்வாகம் | ஊழியர்களை ஆட்சேர்க்கும் நடைமுறை மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறைக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமை. |